**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

CC.No.200/2021

தேதி: 17.10.2024

**<u>பு.சா.1– பழ.ராமன், த/பெ.பழனியப்பன்</u>**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. நான் S.S.L.C படித்துள்ளேன். மேற்கொண்டு இன்ஜியரிங்–ல் சர்டிபிகேட் கோர்ஸ் படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் நன்றாக எழுத படிக்க தெரியும் என்றால் தமிழில் நன்றாக எழுத படிக்க தெரியும். ஆங்கிலத்தில் சில வார்த்தைகள் தெரியும். சர்வே எண். 110/3, 80/2, 81/5, 99/4 குறித்து குளித்தலை உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 129/2008 என்ற எண்ணில் மேற்படி சொத்து சம்பந்தமாக எதிரி என் மீதும், மற்ற 5 நபர்கள் மீதும் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் மேற்படி சொத்து ஜெகதீஸமுதலியார், மருதாம்பாள் ஆகியோர் பெயரில் இருந்தது என்றால் சரிதான்.

2. அந்த வழக்கில் அந்த சொத்தை எதிரி, ஜெகதீஸமுதலியார் வெளியே இருந்ததால் அவருடைய சம்மதத்தின் பேரில் குத்தகைக்கு சாகுபடி செய்து வந்தார் என்றால் சரியல்ல. 17.07.1996 ம் தேதி எதிரி, ஜெகதீஸமுதலியாரிடம் மேற்படி சொத்தை கிரையம் செய்ய வேண்டி ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. மேற்படி ஜெகதீஸமுதலியார், மருதாம்பாள் ஆகியோர் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அதற்கு பின்பு அவரது வாரிசுதாரர்கள் தென்னந்தோப்பை காலி செய்து ஒப்படைக்குமாறு கேட்டார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு கேட்டபோது எதிரி நிலத்தை ஒப்படைக்க முடியாது என்று சொன்னதால், அவர்களுக்கும், எதிரிக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

3. அந்த விரோதத்தை வைத்து கொண்டு நான் மேற்படி நபர்களிடமிருந்து சொத்தை கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்றாலும், இன்றைய தேதி வரை எதிரி தான் குத்தகைதாரர் என்ற முறையில் சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 129/2008 வழக்கு மீண்டும் குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் AS.No.08/2016 என்ற எண்ணில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 12.09.2012 என் மீது எதிரி முதலமைச்சர் தனிபிரிவிற்கு ஒரு புகார் அனுப்பினாரா என்றால் அது காவல் நிலையத்தில் இருந்து வந்து சொன்னபோது தான் எனக்கு தெரியும். காவல் நிலையத்தில் என்னையும், எதிரியையும் விசாரணைக்கு அழைத்தார்களா என்றால் ஆமாம்.

4. மேற்படி விசாரணையில் மேற்கண்ட சொத்துகள் உரிமையியல் நீதிமன்றத்தில் உள்ளதால், நீதிமன்றத்தில் பரிகாரம் தேடி கொள்ளுமாறு காவல் ஆய்வாளர் விசாரணையில் சொன்னாரா என்றால் இல்லை. நான் கொடுத்துள்ள

புகாரில் எதிரி என்னை கையெழுத்து செய்ய சொன்னதாகவும், நான் மறுத்துவிட்டேன் என சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் காவல் நிலையத்திற்குள் போலீசாரையும், என்னையும், எதிரியையும் தவிர வேறு நபர்கள் இல்லை என்றால்  உள்ளே யாரும் இல்லை. வெளியே மற்ற நபர்கள் இருந்தார்கள்.

5. 15.10.2009 ல் என் மீது மாயனூர் காவல் நிலையத்தில் மேற்படி நிலம் சம்பந்தமாக எதிரி புகார் கொடுத்தாரா என்றால் புகாரை பற்றி தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. வேறு யாரோ உடையது. நான் தான் 15.10.2009 ம் தேதி எதிரி மீது புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம். என்னுடைய தோப்பில் தேங்காயை திருடி சென்றதாக கொடுத்தேன். மேற்படி புகாரின் பேரில் என்னையும், எதிரியையும் விசாரித்தார்களா என்றால் என்னை விசாரித்தார்கள். என்னை விசாரித்த அன்று எதிரியை விசாரித்ததாக தெரியவில்லை. மேற்படி புகாரில் சிவில் வழக்கு நிலுவையில் உள்ளதால் போலீசார் தலையிட முடியாது என்றும், நீதிமன்ற தீர்ப்பின்படி தாங்கள் அனுபவித்து கொள்ளலாம் என்றும், அதுவரை தாங்கள் சண்டை, சச்சரவுகளில் ஈடுபடகூடாது என என்னிடமும், எதிரியிடமும் எழுதி வாங்கினார்களா என்றால் இல்லை.

6. வாதி கையெழுத்துயிட மறுத்துவிட்டார் என புகார் விசாரணையில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 12.09.2012 ல் போலீசார் என் வீட்டிற்கு வந்து விசாரணைக்கு அழைத்தார்களா என்றால் ஆமாம். அப்போது மதியழகனும், குணசேகரனும் என் வீட்டில் இருந்தார்கள் என சொல்வது பொய் என்றால் போலீசார் அழைத்து செல்லும்போது, அவர்கள் கடையில் இருந்தார்கள். அவர்கள் இரண்டு பேருடன் 4, 5 பேர்கள் வந்தார்கள். போலீசார் என் வீட்டிற்கு வந்து அழைத்தார்கள் என நீதிமன்ற விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அப்போது  மதியழகனும், குணசேகரனும் போலீசாரை கண்டதால் பதட்டப்பட்டு என்னுடன் வந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் வீட்டில் இல்லை.

7. மதியழகனும், குணசேகரனும் கடையில் இருந்ததாகவும், அவர்கள் இரண்டு பேருடன் 4, 5 பேர்கள் கூட வந்தார்கள் என என்னுடைய புகாரிலோ, என்னுடைய வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு மணிவண்ணன் என்ற மகன் உள்ளார். அவர் முன்னாள் தி.மு.க. அமைச்சர் திரு.செல்வராஜுடன் P.A. ஆக இருந்தார் என்றால் சரிதான். எனக்கு இன்னொரு மகன் கதிர்வேல் என்பவர் உள்ளார். அவர் டிவி ரிப்போர்ட்டர். அவர் மீது இதே நீதிமன்றத்தில் CC.No.22/2021 ல் குற்ற வழக்கு நிலுவையில் இருந்து, 27.12.2021 ல் 2 ஆண்டுகள் தண்டனை கொடுக்கப்பட்டதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

8. நானும், எனது மகனும் ஒரே குடும்பமாக உள்ளோம் என்றால் தனிகுடும்பமாக ஊரில் உள்ளார். பு.சா.ஆ.1, 2, 3, 5, 6 ஆவணங்கள் வழக்கு நிலத்திற்கு சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். எதிரி என் மீது காவல் நிலையத்திலும், முதல்வர் தனிபிரிவிலும் கொடுத்த புகார் நகல் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் காவல் நிலையத்தில் கொடுத்தார்கள். முதல்வர் தனிபிரிவில் கொடுத்த புகார் நகல் எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் பின்னிட்டு சில நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் கொடுத்தார்கள். பு.சா.ஆ.7, 8, 9 ஆவணங்கள் நானே தயார் செய்து கொண்ட மோசடியான ஆவணங்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தை நிரூபிக்க தலைமை ஆசிரியரை சாட்சியம் அளிக்க அழைக்கவில்லை என்றால் தலைமை ஆசிரியர் அவரே சீல் வைத்து கொடுத்துள்ளார். எதிரி வேண்டுமானால் உண்மையா என விசாரித்து கொள்ளலாம்.

9. பு.சா.ஆ.10ல் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு சொத்தை, நான் விற்க முயற்சித்ததாகவும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது அந்த சொத்தின் மீது யாரும் வில்லங்கம் ஏற்படுத்திவிட கூடாது என வழக்கறிஞரால் கொடுக்கப்பட்ட விளம்பரமே ஒழிய என்னை புண்படுத்தும்படி எந்த எண்ணமும், வாசகமோ இல்லை என்றால் சரியல்ல. பு.சா.ஆ.14 வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி வாங்கியதாக ஒப்புதல் அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு பொய்யானது என்றால் சரியல்ல. மேற்படி அறிவிப்பை எதிரி வாங்கவில்லை என்றால் சரியல்ல.

10. பத்திரங்கள் நாசிக் பாதுகாப்பு மையத்தில் அச்சடிக்கிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பத்திரத்தின் உண்மை தன்மை அறிய நாசிக் அச்சகத்திற்கு மட்டும் தான் அதிகாரம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் 19.12.2012ல் மாவட்ட கருவூல அலுவலர் எதிரிக்கு மேற்படி முத்திரை தாள்கள் பற்றிய விவரங்களை கடிதத்தின் வாயிலாக நாசிக் அச்சகத்திலிருந்து ஆங்கிலத்தில் பெறப்பட்டு, அதன் நகலும், தமிழாக்கமும் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது என தெரிவித்துகொள்கிறேன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். **19.12.2012 தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் எதிரி பெற்ற தகவல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

11. என்னிடம் காட்டப்படும் ஆவணம் INDIA SECURITY PRESS, NASIK இருந்து கரூர் மாவட்ட கருவூல அலுவலருக்கு வந்த ஆங்கில கடிதம் என்றால் சரிதான். **27.11.2012 INDIA SECURITY PRESS, NASIK இருந்து கரூர் மாவட்ட கருவூல அலுவலருக்கு வந்த ஆங்கில கடிதம் எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் ஆவணம் கரூர் மாவட்ட கருவூல அலுவலர் கொடுத்த தமிழாக்கம் என்றால் சரிதான். **19.12.2012 கரூர் மாவட்ட**

**கருவூல அலுவலர் கொடுத்த தமிழாக்கம் எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

12. நான் மனித உரிமை ஆணையத்தில் மாயனூர் காவல் நிலைய ஆய்வாளர் திரு.சின்னதம்பி மீதும் மற்றும் சில போலீசார் மீதும் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அவர்கள் கொடுத்த வழிகாட்டுதலின்படி குளித்தலை JM–II நீதிமன்றத்தில் மாயனூர் காவல் நிலைய ஆய்வாளர் திரு.சின்னதம்பி மீதும் மற்றும் சில போலீசார் மீது புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம். மனித உரிமை ஆணையத்தில் இருந்த வந்த புகாரை மாவட்ட அமர்வு நீதிமன்றம் தான் விசாரிக்க வேண்டும் என கரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நீதிமன்றத்தில் வழக்கு எண் SC.No. 74/2020 வழக்கு விசாரணை நடந்தது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எதிரியின் மீது எவ்வித குற்றமும் இல்லை என்றும், சிவில் வழக்கை கிரிமினல் வழக்காக மாற்ற முயற்சித்ததாகவும், போலீசார் விசாரணை சரியான பாதையில் சென்றதாகவும், என்னுடைய சாட்சியம் முன்னுக்குபின் முரண்பட்டு இருப்பதாகவும் கூறி. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி காரணம் இல்லை. **கரூர் மாவட்ட அமர்வு நீதிமன்ற வழக்கு SC.No. 74/2020 ன் தீர்ப்புரை எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

13. எதிரி திருக்காம்புலியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் 3 முறை அதாவது 9 ஆண்டுகள் தலைவராக இருந்தார் என்றால் சரிதான். திருக்காம்புலியூர் பஞ்சாயத்து 1வது வார்டில் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு 2 முறை பதவியில் இருந்தார் என்றால் எனக்கு தெரிந்தவரை இல்லை. எதிரி காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர் என்றால் எனக்கு தெரியாது. எதிரி ஒன்றுபட்ட திருச்சி மாவட்ட காங்கிரஸில் இருந்து, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு பொதுகுழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் எனக்கு தெரியாது. எதிரி ஒன்றுபட்ட திருச்சி மாவட்ட இளைஞர் காங்கிரஸில் 1967–1968ல் அமைப்பாளராக இருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

14. என் அப்பா 1996ம் ஆண்டு இறந்துவிட்டார். என் அப்பா இறந்தபிறகு என் சகோதர்களுக்குள் ஒற்றுமை இல்லாததால் 2முறை கருமாதி நடந்தது என்றால் இல்லை. இது கற்பனையானது. நான் எதிரி மீது இந்த வழக்கை 2015ம் ஆண்டு தாக்கல் செய்தேன். வழக்கில் உண்மை தன்மை இல்லாமல் வயதான எதிரியை அலைகழிக்க வேண்டி இத்தனை வருடங்களாக இழுத்தடித்தேன் என்றால் சரியல்ல. எதிரி தான் வழக்கை இழுத்தடித்து வருகிறார். நான் வீட்டுவசதி சங்கத்தில் துணை தலைவராகவும், Village Headman ஆகவும் இருந்திருக்கிறேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் அவசியம் இல்லை. ஊரில் அனைவருக்கும் தெரியும். நான் எனது

மகன் ரிப்போர்ட்டரை வைத்து கொண்டு, மற்றவர்களை மிரட்டி பிளாக்மெயில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

15. நான் வழக்கறிஞர் ரத்தினத்திற்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ஆமாம். இந்த வழக்கில் எந்த உண்மை தன்மையும் இல்லை என்றும், என்னை காயப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எதிரிக்கு இல்லை என்றும், சிவில் வழக்கை வைத்து மேற்படி இந்த வழக்கை சட்டத்திற்கு புறம்பாக தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/– M.Santhosham,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.